FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318773

1. District மாவட்டம் : திருப்பூர் | PS காவல்நிலையம் : 24 கரை | Year ஆண்டு 2025 | FIR No முதஅ எண் 11 | Date நாள் 17.11.25

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act-1988 as Amended Act-2018 | Sections பிரிவுகள்: 07 of PC Act
(ii) Act சட்டம்: and 106 BNSS | Sections பிரிவுகள்: 106 of BNSS
(iii) Act சட்டம் | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 17.11.25 | Date from நாள் முதல் : | Date to நாள் வரை :
Time Period நேர அளவு : | Time from நேரம் முதல் : 17.50 | Time to நேரம் வரை : 20.30
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.11.25 | Time நேரம் : 22.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் : 22.30

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அடுமார் 35 கி.மீ. மேட கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி : நார் பாதாளர் அலுவலகம், கோயமுத்தூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. கனகசபாபதி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி : ஆயுதப்படை ஆயுதப்படை அலுவலகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) கோயம்புத்தூர் நார்பாதாளர் அலுவலக உதவியாளர் மற்றும் மோதலில் சம்பந்தப்பட்ட ஏ. ஜெயபால், 2) டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் - ஏ.எச். ஜீவ அருள்ராஜ் 3) ஏ.எம். பாரதி, அலுவலக உதவியாளர், 4) டேட்டா ஆப்ரேட்டர் ஏ.பி. கணேஷ், 5) காவலர் உதவியாளர் ஏ.வி. நவீன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- நாமதமில்லை -

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அம்மா, தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.11.25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

17.11.25

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17 11 2025 at 23.30 hrs.

Name பெயர் [illegible]
Rank நிலை காவல் உதவி ஆய்வாளர்

<u>பணிந்து அனுப்பப்படுகிறது,</u> அம்மையீர், நான் இன்று 17.11.2025-ம் தேதி இரவு 20.00 மணியளவில், நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர் ஆய்வுக்குழு ஆய்வாளர் திருமதி.K.கலைச்செல்வி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 17.11.2025-ம் தேதி 20.30 மணிக்கு, விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 11/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSSன்படிவழக்குபதிவுசெய்யப்பட்டது.அனுப்புநர்,திருமதி.K.கலைச்செல்வி,ஆய்வுக்குழுஆய்வாளர்,ஆய்வுக்குழுஅலுவலகம்,கடலூர் மாவட்டம்.பெறுநர்,காவல் ஆய்வாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,விழுப்புரம்.<u>ந.க.எண்.அ/730/2025, நாள்.17.11.2025</u>அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - மயிலம் சார் பதிவாளர் அலுவலகம் - 17.11.2025 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:17.11.2025. 17.11.2025 ஆம் தேதி திருமதி.K.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம் ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம், மயிலம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர் மூலமும், புரோக்கர் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கு பணியில் இருந்த செல்வி.ந.ஈஸ்வரி, காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம் அவர்கள் மற்றும் அவரது காவல் குழுவினருடன் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 17.50 மணியளவில் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, அலுவலகத்தில் பின்னர் தெரிந்த 1) உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.R.நதியா, அவர்கள் தெற்கு பார்த்த வாசற்படியில் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்து இருந்தார். 2).அவரது இடது புறத்தில் தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் Zigma என்ற தனியார் நிறுனத்தின் மூலம் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரியும் திரு.H.வீரஅப்துல்லா அமர்ந்திருந்தார். 3) சார்பதிவாளருக்கு முன்பு இடதுபுற மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.M.பிரகாஷ் என்பவர் அமர்ந்திருந்தார். 4) சார்பதிவாளருக்கு முன்பு இடதுபுற முன்பு கண்ணாடியால் தடுக்கப்பட்ட அறையில் மேற்கு நோக்கி

போடப்பட்டிருந்த நாற்காலியில் கேமரா ஆப்ரேட்டர் திரு.P.கணேசன் என்பவர் அமர்ந்திருந்தார். 5) சார்பதிவாளரின் இருக்கைக்கு முன்பு வலது புறம் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.V.நளினி என்பவர் அமர்ந்திருந்தார்.6) சார்பதிவாளர் அலுவலகம் முன்பு சார்பதிவாளரின் கார் ஓட்டுநர் தனிநபரான திரு.R.சூர்யமூர்த்தி என்பவர் நின்றிருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே பத்திரப்பதிவு செய்யும் இடத்தில் தனி நபரான 7) திரு.R.விநாயகம், த/பெ. ராமானுஜம்,பெருமாள் கோயில் தெரு, மயிலம் என்பவர் நின்றிருந்தார். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ் கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது. திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:1) அலுவலகத்தில் இருந்த உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.R.நதியா அவர்களை ஒரு பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ய அவரது கைப்பையில் ரூபாய்.1,70,000/- (500X 340)பணம் இருந்தது. அலுவலகத்தில் இருந்த தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் ரூ.1,700/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) அலுவலகத்தில் இருந்த Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரியும் திரு.H.வீரஅப்துல்லா என்பவரை ஒரு காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் ரூ.7,890/- (500 X 15, 100 X 3, 50 X 1, 20 X 2) இருந்தது. அலுவலகத்தில் இருந்த தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் ரூ.500/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 3) அலுவலகத்தில் இருந்த திரு.M.பிரகாஷ், அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்ததில் அவரிடம் ரூபாய்.10,000/- (500 X 15, 200 X 7, 100 X 11) இருந்தது. அலுவலகத்தில் இருந்த தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் ரூ.1,100/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 4) அலுவலகத்தில் இருந்த கேமரா ஆப்ரேட்டர் ஆக பணி செய்யும் திரு.P.கணேசன் என்பவரை ஒரு காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.11,900/- (500 X 22, 200 X 3, 100 X 3) கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் இருந்த தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் ரூ.500/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5) அலுவலகத்தில் இருந்த இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.V.நளினி என்பவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் ரூபாய்.540/- (200 X 2, 50 X 1, 20 X 4, 10 X 1)

இருந்தது. தனி நபர் ரொக்க பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க ரூபாய்.560/- இருந்தது. அந்த தொகை தனியாக இருந்ததை எடுத்து காட்ட அது சரியாக இருந்தது. அவரிடம் சோதனை செய்து எடுக்கப்பட்ட ரூபாய்.540/-இனை பற்றி விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6) அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளரின் கார் ஓட்டுநர் தனிநபரான திரு.R.சூர்யமூர்த்தி என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் இருந்து எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.7) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.R.விநாயகம், த/பெ. ராமானுஜம், பெருமாள் கோயில் தெரு, மயிலம் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் இருந்து எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.அதன் பின்னர், மயிலம் சார் பதிவாளர் அவலகத்தில், சார் பதிவாளர் இருக்கை இருக்கும் அறை, ஆவணங்கள் இருக்கும் முதலாவது மற்றும் இரண்டாவது பதிவறைகள், சார் பதிவாளர் அலுவலக வராண்டா, சார் பதிவாளர் அலுவலக வெளிப்புற வளாகம் ஆகியவற்றினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. இந்த திடீராய்வின்போது மேற்படி வகையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை **ரூ.2,00,330/-** (ரூபாய் இரண்டு லட்சத்து முன்னூற்று முப்பது மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான A கணக்குப் பதிவேடு, மற்றும் G, H கணக்கு பதிவேடுகளை சரிபார்க்க பதிவேட்டினை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக மயிலம் சார்பதிவாளர் அலுவலக நிரந்தர பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2025, தொகுப்பு ஊதிய பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2025, தனி நபர் பண இருப்பு பதிவேடு-2025, தணிக்கை வருகை பதிவேடு-2025, தாமத வருகை பதிவேடு-2025, மற்றும் இயக்கப்பதிவேடு-2025 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.பிறகு அலுவலகத்தில் இருந்த, மயிலம் சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.R.நதியா, அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. மயிலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல ஆய்வாளர் செல்வி.ஈஸ்வரி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 17.11.2025-ம் தேதி மாலை சுமார் 17.50 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 17.11.2025-ம் தேதி இரவு சுமார் 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது.மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீராய்வு மகசரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த திடீராய்வின்போது கணக்கில் வராத தொகையான **ரூ.2,00,330/-** (ரூபாய் இரண்டு லட்சத்து முன்னூற்று முப்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக 1) மயிலம் சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.R.நதியா 2) டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திரு.H.வீரஅப்துல்லா 3) திரு.M.பிரகாஷ், அலுவலக உதவியாளர் 4) கேமரா ஆப்ரேட்டர் திரு.P.கணேசன் 5) இளநிலை உதவியாளராக திருமதி.V.நளினி ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, sd(xxxx) ஆய்வுக்குழு ஆய்வாளர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம். இணைப்பு:1. திடீர் ஆய்வு மகஜர் (நாள்-17.11.2025) 2. ரொக்கம் ரூபாய் 2,00,330/- 3. 7-நபர்களின் வாக்குமூலங்கள். 4. அலுவலக நிரந்தர பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2025, 5.தொகுப்பு ஊதிய பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2025, 6.தனி நபர் பண இருப்பு பதிவேடு-2025,7.தாமத வருகை பதிவேடு-2025, 8.இயக்கப்பதிவேடு-2025.

Madam,

Received the above computer typed complaint on 17.11.2025 at about 20.00 hrs. Hence, I registered a case in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.11/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 20.30 hrs today on 17.11.2025.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble District Sessions Judge, Villupuram / Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(N.Eswari) 17.11.25
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.